# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.

## PROSECUTION OF WITNESS

## C.C.No.60/2026

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW–1 : திரு.சம்பத்குமார் த/பெ சுந்தரேசன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் சோமனஅள்ளியில் குடியிருந்து, பஞ்சாயத்து செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. 25.10.2025 அன்று இரவு 09.30 மணிக்கு எனது இரண்டு மகன்கன் ஆகாஷ், அவினாஷ், எனது மனைவி வரலட்சுமி என்னுடன் 4 பேரும் பெங்களூர் விமான நிலையத்திற்கு எனது மகன் ஆகாஷை லண்டன் செல்வதற்காக அழைத்து சென்றபோது, அவரை விமானத்தில் ஏற்றிவிட்டு என்னுடைய சோமனஅள்ளியில் உள்ள வீட்டிற்கு காலை 07.30 மணிக்கு வந்து பார்த்தபோது, எனது வீட்டின் மெயின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் உள்ள 2 பீரோவின் லாக்கர்கள் உடைக்கப்பட்டு, அதில் வைத்திருந்த 57 பவுன் நகைகள் திருடப்பட்டு இருந்தது. 1) இரட்டை பட்டை செயின் 4 பவுன், 2) ஒத்த பட்டை செயின் 3 பவுன், 3) 1 பவுன் காயின்கள்–3, 4) 4 வளையல்கள் 9 பவுன், 5) 2 பிரேஸ்லேட் 2 பவுன், 6) நெக்லஸ், ஆரம் ஒரு செட் – 7 பவுன், 7) 3 நெக்லஸ் 8 பவுன், 8) 2 செயின்–8 பவுன், 9) 3 செட் கம்மல்– 1 ¾ பவுன், 10) மூக்குத்தி 1 செட் ½ பவுன், 11) ஒரு தாலிக்கொடி –10 பவுன், 12) மூன்று ¼ பவுன் மோதிரங்கள் முக்கால் பவுன், 13) கொலுசு, அரைநான்கொடி, பிரேஸ்லைட், தட்டு முதலிய வெள்ளி பொருட்கள் 1 கி.கி, 14) பணம் ரூ.1,18,000/– ஆகியவை திருடு போய் இருந்தனர். என்னுடைய CCTV கேமிராவில் பார்த்தபோது, 3 நபர்கள் காரில் வந்தார்கள், அதில் ஒரு நபர் பூட்டுகளுக்கு டார்ச் லைட் அடித்து பார்த்துவிட்டு சென்றார். பின்பு 2 நபர்களாக வந்தார்கள், அதில் ஒரு நபர் 2 அடி இரும்பு ராடுடன் காம்பௌண்ட் சுவரை எகிரி குதித்து உள்ளே இருந்த CCTV கேமிராவிற்கு spray அடித்தார். பின்பு பூட்டை உடைத்து உள்ளே சென்று, 2 பீரோக்களை உடைத்து மேற்கண்ட பொருட்களை திருடி சென்றது CCTV கேமிராவில் பதிவானது தெரிந்தது. நீதிமன்றத்தில் 2வதாக நின்று கொண்டிருந்த நபர் தான் CCTV கேமிராவிற்கு spray அடித்தவர் (சாட்சி 2வது எதிரி வெங்கடேஷ்ஐ சுட்டி காட்டினார்). வலதுபுறம் நின்று

கொண்டிருந்தவர் கார் அருகே நின்று கொண்டிருந்தார் (சாட்சி 3வது எதிரி மணிகண்டனை சுட்டி காட்டினார்). அன்றையதினமே இண்டுர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். 15 நாட்கள் கழித்து எதிரிகளை பிடித்துவிட்டதாக காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். எதிரிகள் மூவரும் இருந்தார்கள். எதிரிகளை போலிசார் பார்க்க சொன்னார்கள். நான் பார்த்தபோது CCTV கேமிராவில் இருந்தவர்கள் தான் காவல் நிலையத்தில் இருந்தார்கள். எதிரிகளிடம் கைப்பற்றிய சிகப்பு நிற Baleno காரில் தான் என்னுடைய வீட்டில் திருடியபோது பயன்படுத்திய கார் என உறுதி செய்யப்பட்டது. எதிரிகள் என்னுடைய வீட்டில் திருடிய தங்க நகைகள் எல்லாம் கட்டியாக உருக்கி வைத்திருந்தார்கள், அதை போலிசார் கைப்பற்றினார்கள். என் வீட்டில் திருடிய வெள்ளி நகைகள் எல்லாம் உருக்கி கொலுசு போன்ற வேறு நகைகளாக மாற்றி உள்ளனர், அவற்றை எதிரிகளிடம் இருந்து கைப்பற்றினர். எதிரிகள் என்னுடைய வீட்டில் திருடிய தங்க நகைகள் 4 பிஸ்கட்டுகளாக மொத்தம் 400 கிராம் கொண்ட தங்கத்தையும், 5 செட் கொலுசுகளையும், பணம் ரூ.1,18,000/−யும் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டேன். மீதம் உள்ள 7 பவுன் நகைகள் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் நான் பெற்று கொண்ட நகைகள் ஆகும். அவை **சா.பொ.ஆ.1 ஆகவும், புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:07:10 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS**

**C.C.No.60/2026**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-2 : திருமதி.வரலட்சுமி க/பெ சம்பத்குமார்**

**முதல் விசாரணை**

நான் சோமனஅள்ளியில் குடியிருந்து, இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 எனது கணவர் ஆவார். 25.10.2025 அன்று இரவு 09.30 மணிக்கு எனது இரண்டு மகன்கன் ஆகாஷ், அவினாஷ், எனது கணவர் அ.சா.1 சம்பத்குமார் என்னுடன் 4 பேரும் பெங்களூர் விமான நிலையத்திற்கு எனது மகன் ஆகாஷை லண்டன் செல்வதற்காக அழைத்து சென்றபோது, அவரை விமானத்தில் ஏற்றிவிட்டு என்னுடைய சோமனஅள்ளியில் உள்ள வீட்டிற்கு காலை 07.30 மணிக்கு வந்து பார்த்தபோது, எனது வீட்டின் மெயின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் உள்ள 2 பீரோவின் லாக்கர்கள் உடைக்கப்பட்டு, அதில் வைத்திருந்த 57 பவுன் நகைகள் திருடப்பட்டு இருந்தது. 1) நெக்லஸ் 9 பவுன், 2) தாலி செயின் 10 பவுன், 3) நெக்லஸ் 6 பவுன், 4) 3 செட் வளையல் 10 பவுன், 5) 3 மோதிரம் – 3 ¾ பவுன், 6) 2 பிரேஸ்லைட் 2 பவுன், 7) 3 செட் தோடு 3 ¾ பவுன், 8) செயின் 3 பவுன், 9) 3 காயின்கள் 3 பவுன் ஆக மொத்தம் 57 பவுன், 2 கி.கி வெள்ளி காயின்கள், அரைநான்கொடிகள், கொலுசுகள், கால் மோதிரம், தட்டு, டம்ளர், பூஜை பொருட்கள் போன்ற பல்வேறு வெள்ளி நகைகள் மொத்தம் 2 கி.கி வெள்ளி திருடு போய் இருந்தனர். இதுசம்மந்தமாக அன்றையதினமே எனது கணவர் இண்டுர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். 10 நாட்கள் கழித்து எதிரிகளை பிடித்துவிட்டதாக காவல் நிலையத்திற்கு அழைத்தார்கள். தங்க நகைகள் 4 பிஸ்கட்டுகளாக மொத்தம் 400 கிராம் கொண்ட தங்கத்தையும், ½ கி.கி வெள்ளி கொலுசுகளையும், பணம் ரூ.1,18,000/-யும் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டோம். இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:07:15 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JM.No.II, DHARMAPURI.**

**PROSECUTION OF WITNESS**

**C.C.No.60/2026**

| | | | |
|---|---|---|---|
| NAME | : | CALLING | : |
| FATHER'S NAME | : | RELIGION | : |
| VILLAGE | : | AGE | : |
| TALUK | : | DATE | : **28.07.2026** |

(Oath shall be affirmed as per the provisions of The Oaths Act, 1969) (Act 44 of 1969)

**Accused present.**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**PW-3 : திரு.அவினாஷ் த/பெ சம்பத்குமார்**

**முதல் விசாரணை**

நான் சோமனஅள்ளியில் குடியிருந்து, கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 எனது அப்பா, அம்மா ஆவார். 25.10.2025 அன்று இரவு 09.30 மணிக்கு எனது அண்ணன் ஆகாஷ், எனது அப்பா சம்பத்குமார், எனது அம்மா வரலட்சுமி என்னுடன் 4 பேரும் பெங்களூர் விமான நிலையத்திற்கு எனது அண்ணன் ஆகாஷை லண்டன் செல்வதற்காக அழைத்து சென்றபோது, அவரை விமானத்தில் ஏற்றிவிட்டு எங்களுடைய சோமனஅள்ளியில் உள்ள வீட்டிற்கு காலை 07.30 மணிக்கு வந்து பார்த்தபோது, எனது வீட்டின் மெயின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் உள்ள 2 பீரோவின் லாக்கர்கள் உடைக்கப்பட்டு, அதில் வைத்திருந்த 57 பவுன் நகைகள் திருடப்பட்டு இருந்தது. அவை ஆரம், நெக்லஸ், செயின், வளையல், ஒத்தபட்டை செயின், இரட்டைபட்டை செயின், மூக்குத்தி, மோதிரம், பிரேஸ்லைட், 3 தங்க காயின்கள் 3 பவுன், தாலி செயின் 10 பவுன், வெள்ளி பொருட்கள் 1 கிலோவிற்கு மேல் உள்ள பொருட்கள் விளக்கு, டம்பளர், தட்டு, நிறைய கால் கொலுசுகள், பழைய வெள்ளி பொருட்கள், வெள்ளி காயின்கள், பணம் ரூ.1,18,000/- ஆகியவை திருடு போய் இருந்தனர். எங்களுடைய வீட்டு எதிரே உள்ள ரவி மண்டி CCTV கேமிராவிலும் எங்களுடைய CCTV கேமிராவிலும் பதிவாகியிருந்ததை நான் பார்த்தேன். அதில் சிகப்பு நிற Baleno காரில் நீதிமன்றத்தில் நடுவில் உள்ள (2வது எதிரி வெங்கடேசனை சுட்டிகாட்டுகிறார்) உள்ளவர் பூட்டின் மீது டார்ச் லைட் அடித்தார். எதிரி வெங்கடேசனே திரும்ப காருக்கு சென்று காரில் இருந்து கதவை உடைக்க பயன்படுத்திய இரும்பு ராடை எடுத்து கொண்டு அவருடன் மற்றொரு எதிரி வந்தார். அவர் தற்போது நீதிமன்றத்தில் வலதுபுறத்தில் உள்ள எதிரி ஆவார். (3வது எதிரி மணிகண்டனை சுட்டிகாட்டுகிறார்). தற்போது நீதிமன்றத்தில் இடதுபுறத்தில் உள்ள மற்றொரு எதிரி Baleno காரை தயாராக வைத்து அதில் இருந்தார். (1வது எதிரி தமிழ்செல்வனை சுட்டிகாட்டுகிறார்). வீட்டில் உள்ள CCTV கேமிராவை

சோதனை செய்தார்கள். நீதிமன்றத்தில் நடுவில் உள்ள எதிரி (2வது எதிரி வெங்கடேசனை சுட்டிகாட்டுகிறார்) மெயின் கதவை பார்த்தபடி உள்ள கேமிராவில் ஸ்பிரே அடித்தது தெரிந்தது. அதன்பிறகு எதிரிகள் வீட்டில் இருந்து வெளியே வருவது தான் கேமிராவில் பதிவாகி இருந்தது. அப்போது எதிரிகள் வீட்டில் கருப்பு நிற பேக்கில் திருடிய பொருட்கள் எடுத்து வருவது தெரிந்தது. அந்த பொருட்களை அடங்கிய பேக்கை காரில் போட்டுகொண்டு சென்றுவிட்டார்கள். 15 நாட்கள் கழித்து எதிரிகளை கைது செய்ததாக காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள். CCTV கேமிராவில் பார்த்தது மூலம் தான் எங்கள் வீட்டில் உள்ள தங்கம், வெள்ளி, பணம் ஆகியவற்றை திருடியதாக உறுதிபடுத்தி கொண்டோம். அவர்கள் திருடியபோது பயன்படுத்திய காரை அடையாளம் தெரிந்து கொண்டோம். எதிரிகளிடம் இருந்து போலிசார் கைப்பற்றிய ரூ.1,18,000/– பணத்தையும், ½ கி.கி கொலுசு போன்ற வெள்ளி பொருட்களையும், தங்கம் 4 பிஸ்கெட்களாக 400 கிராம் தங்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டோம். மீதம் உள்ள 14 பவுன் நகைகள் எங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. இந்த சம்பவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை** – எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வரவில்லை.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.07.28 17:07:20 +0530